**05 செப்டம்பர் 2023**

## தேசிய மற்றும் சர்வதேச செய்திகள்

| | |
|---|---|
| **13 இமயமலை மாநிலங்கள்** | இந்திய இமயமலைப் பகுதி 13 இந்திய மாநிலங்கள்/ஒன்றிய பிரதேசங்களில் பரவியுள்ளது மற்றும் 2500 கிமீ வரை நீண்டுள்ளது.<br><br>**என் இது செய்திகளில் இடம்பிடித்துள்ளது ?**<br>• மத்திய அரசு 13 பேர் கொண்ட தொழில்நுட்ப குழு 13 இமய மலையின் மாநிலங்களின் "தாங்கும் திறன்" ஆராய அமைத்துள்ளது.<br>• இந்த மாநிலங்களில் ஏற்படும் பேரழிவுகளை குறைக்கவும் மற்றும் தடுக்கவும் இக் குழுவை அமைத்துள்ளது.<br><br>**13 இமயமலையின் மாநிலங்கள் பெயர்கள்:**<br>1. ஜம்மு மற்றும் காஷ்மீர்,<br>2. லடாக்,<br>3. உத்தரகாண்ட்,<br>4. இமாச்சல பிரதேசம்,<br>5. அருணாச்சல பிரதேசம்,<br>6. மணிப்பூர்,<br>7. மேகாலயா,<br>8. மிசோரம்,<br>9. நாகாலாந்து,<br>10. சிக்கிம்,<br>11. திரிபுரா,<br>12. அசாம் மற்றும்<br>13. மேற்கு வங்கம். |
| **18வது ஜி20 உச்சி மாநாடு 2023** | **முக்கிய குறிப்புக்கள்:**<br>• புது டெல்லியில் (செப்டம்பர் 9 மற்றும் 10) நடைபெறவுள்ளது.<br>• சீன அதிபர் முதல் முறையாக இந்த ஜி-20 மாநாட்டைத் தவிர்க்கிறார் .<br>• இதில் 40 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள்(ஜி 20 உறுப்பினர்கள் உட்பட) கலந்துகொள்கிறார்கள். |

| | |
|---|---|
| | • இது "வசுதைவ குடும்பகம்" என்ற கருப்பொருளின் அடிப்படையில் உலகளாவிய தீர்வுகளில் கவனம் செலுத்தவது இதற்கான அர்த்தம் ஒரு பூமி, ஒரு குடும்பம், ஒரு எதிர்காலம் ஆகும்.<br>• ஒற்றுமை, நீடித்திட நிலையான மற்றும் தூய்மையான வாழ்க்கை ஆகியவற்றை இந்த ஜி20 கருப்பொருள் சுட்டிக்காட்டுகிறது |
| **18 ஆம் G20 உச்சிமாநாடு 2023 ல் பேசப்படும் முக்கியமான உலகளாவிய பிரச்சினைகள்** | **கவனசெலுத்த கூடிய பகுதிகள்:**<br>பசுமை வளர்ச்சி, காலநிலை நிதி, குறைந்த கார்பன் தொற்றுநோய்களை எதிர்த்துப் போராடுவதற்கான தொழில்நுட்பங்கள் (LiFE) , அனைத்து சமூக பிரிவுகளிலும் பொருளாதார வளர்ச்சி, நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை(SDGs) நோக்கி துரிதமாக முன்னேறுதல் மற்றும் பெண்கள் அதிகாரம். |
| **காலநிலை மாற்றத்தின் தாக்கங்கள் .** | **ஐக்கிய நாடுகள் மற்றும் பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு 2019 ஆய்வின் படி-**<br>• அதிக வெப்பநிலையால் 2030 ஆம் ஆண்டில், உலகளவில் மொத்த வேலை நேரம் 2.2 சதவிகிதமாக இழக்க நேரிடும் , 80 மில்லியன் முழுநேர வேலைகளுக்கு சமமான உற்பத்தியிலும் இழப்பு நேரிடும்.<br>• காலநிலை மாற்றத்தால் பாலினத்தில் விகிதாசாரமாக ஆண்களை விட பெண்கள் மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களாகக் கருதப்படுகிறார்கள்.<br>• வளரும் மற்றும் குறைந்த வளர்ச்சியடைந்த நாடுகளில் உள்ள பெண்கள் (குறிப்பாக குறைந்த வருமானம் கொண்ட பகுதிகள்) காலநிலை மாற்றத்தால் மிகவும் பாதிப்பு அடைகிறார்கள் காரணம் அவர்கள் இயற்கை வளங்களைச் சார்ந்திருத்தல் மற்றும் அவர்களின் கடின உழைப்பு மட்டுமே அவர்களுக்கு வாழ்வாதார மாக உள்ளது.<br>• 2050 ஆண்டிற்குள் 1.2 பில்லியன் காலநிலை அகதிகள் இருக்கலாம்.<br>• தீர்வுகள் : பெண்கள் கல்வியில் முதலீடு செய்தல் ; காலநிலை கொள்கை முடிவெடுத்தலில் பெண்களின் பங்கேற்பு; மற்றும் பாலினம் மற்றும் காலநிலை மாற்றம் மேம்பாடு திட்டங்கள். |

| | |
|---|---|
| **இ - அதிகம் திட்டம்** | **முக்கிய குறிப்புக்கள்:**<br>• ஹரியானா அரசாங்கத்தின் முன்னோட்டம் ஆகும்.<br>• இத் திட்டத்தின் கீழ் கிட்டத்தட்ட 3 லட்சம் மாணவர்களின் ஆன்லைன் கல்வி உதவிக்காக டேப்லெட் கணினிகள் வழங்கப்படுகிறது.<br>• ஒரு நாளைக்கு 2ஜிபி டேட்டா இலவசமாக வழங்கப்படுகிறது. |
| **<u>பிரதான் மந்திரி உஜ்ஜவால திட்டம்(PMUY)</u>** | **முக்கிய குறிப்புக்கள்:**<br>• இத்திட்டம் பெட்ரோலியம் மற்றும் இயற்கை வாயு அமைச்சகத்தால் கொண்டு வரப்பட்டது .<br>• இது வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள பெண்களின் குடும்பங்களுக்கு (BPL) LPG இணைப்புகளை வழங்குகிறது.<br>• இந்த திட்டம் முதன் முதலில் மே 1, 2016 அன்று உத்தரபிரதேசத்தில் பிரதமரால் தொடங்கப்பட்டது ,மார்ச் 2020க்குள் 8 கோடி இணைப்புகளை இலக்காக நிர்ணயித்தது .<br>• உஜ்வாலா 1.0 இன் போது, இலக்காக 5 கோடி வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள பெண்களின் குடும்பங்களுக்கு (BPL) LPG இணைப்புகளை வழங்க நிர்ணயிக்கப்பட்டது.<br>• அதன்பிறகு, இந்தத் திட்டம் ஏப்ரல் 2018 இல் விரிவுபடுத்தப்பட்டது இதில் மேலும் ஏழு வகைகளைச் சேர்ந்த பெண் பயனாளிகள் (பட்டியல் சாதிகள் /பட்டியல் பழங்குடியினர், பிரதான் மந்த்ரி அவாஸ் யோஜனா (PMAY) திட்டத்தின் கீழ் உள்ளவர்கள் , அந்த்யோதயா அன்ன யோஜனா (AAY)திட்டத்தின் கீழ் உள்ளவர்கள்,மிகவும் பின்தங்கிய வகுப்பினர், தேயிலை தோட்டத்தில் வேலை செய்பவர்கள் , வனத்தில் உள்ளவர்கள் மற்றும் தீவுகளில் இருப்பவர்கள் ). சேர்க்கப்பட்டனர்.<br>• மேலும் இதன் இலக்கு 8 கோடி LPG இணைப்புகளாக மாற்றியமைக்கப்பட்டது.<br>• பிரதான் மந்திரி உஜ்ஜவால திட்டம்(PMUY 2.0 ) 2021-22 நிதியாண்டில் கூடுதலாக ஒரு கோடி இணைப்புகள் வழங்கவதற்கான .ஏற்பாடு ஆரம்பிக்கப்பட்டது.<br>• இது மத்திய அரசின் நிதியுதவி திட்டம் ஆகும் . |
| **<u>Laicite(மதசார்பின்மை): (அரசியியல்)</u>** | **முக்கிய குறிப்புக்கள்:**<br>• இது பிரெஞ்சு மதச்சார்பின்மை கொள்கை ஆகும்.<br>• இந்த சொல் 19 ஆம் நூற்றாண்டில் தோன்றியது. |

| | |
|---|---|
| | • இது அரசு மற்றும் திருச்சபையின் முறையான பிரிவாக புரிந்து கொள்ளப்படுகிறது. . |
| **மத்திய வங்கி டிஜிட்டல் நாணயம்(CBDC): (பொருளாதாரம்)** | **முக்கிய குறிப்புக்கள்:**<br>• மத்திய வங்கி டிஜிட்டல் நாணயம் (CBDC), அல்லது தேசிய டிஜிட்டல் நாணயம் என்பது டிஜிட்டல் வடிவத்தில் உள்ள ஒரு நாட்டின் ஆணை அல்லது உத்தரவு(Fiat) நாணயம் ஆகும்.<br>• காகித நாணயம் அல்லது நாணயங்களை அச்சிடுவதற்கு பதிலாக, மத்திய வங்கி வெளியிடும் மின்னணு டோக்கன்கள் ஆகும் .<br>• இந்த டோக்கன் மதிப்பு அரசாங்கத்தின் முழு நம்பிக்கையும் மற்றும் கடன் மூலம் ஆதரிக்கப்படுகிறது.<br>• இது தேசிய டிஜிட்டல் நாணயம் என்றும் அழைக்கப்படுகிறது. |